கொடுக்கப் போகிறீர்கள்? சட்டமன்றம் முடிவதற்குள்ளாக நிரூபிக்கப் போகிறார்களா? அல்லது சட்டமன்றம் முடிந்ததற்குப் பிறகு அந்தப் பிரச்சினை வரப்போகிறதா? அதற்கான காலக் கெடுவை நிர்ணயிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரைவில் அதற்கான விடைகளைக் கலந்து பேசி உங்களுக்குத் தெரிவிப்பேன்.

(ஆ) அம்பேத்கார் அமைப்புகள் வேலூரில் ஊர்வலம் நடத்துவதற்குக் காவல்துறை அனுமதிக்காதது குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாமேதை அம்பேத்கார் புகழ் பரப்பும் சில அமைப்புகளும், குடியரசுக் கட்சியின் பிரிவுகளும் ஒன்றுபட்டு காந்திய அறவழியில் வேலூரில் ஊர்வலம் ஒன்று நடத்த அனுமதி கேட்டிருந்ததாகவும், காவல் துறை நேற்று வரையில் பதில் எதுவும் சொல்லாமல் இன்று அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்று தகவல் கொடுத்திருப்பதாகவும் அதனால் அந்த ஏற்பாட்டாளர்களில் ஒரு சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் ஒரு தகவல் வந்திருக்கிறது. அவை அரசு அறியுமா? அதைப் பற்றிய விவரத்தை முதல்வர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

10-05 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து, இப்போது தான், சற்று முன்புதான் என்னிடத்தில் கூறப்பட்டு, இந்த அவையிலே எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை ஆகும். அது குறித்து முழுமையாக தகவல்கள் எதுவும் இல்லாமல் அரைகுறையாக எந்தத் தகவலையும் நான் சொல்ல விரும்பவில்லை. இது நடைபெற்றதாக சொல்லப்பட்ட இடம் வேலூர். வேலூரை தலைநகராகக் கொண்டு தான், இந்த அரசு முதன் முதலாக வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். அம்பேத்கார் மீது அன்பும் பற்றும், மதிப்பும், பாசமும் கொண்டது இந்த அரசு. அவருடைய பெயருக்குக் களங்கம் ஏற்படும் வகையில் எந்த முயற்சியிலும் இந்த அரசு ஈடுபடாது. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுகையில் ஒரு புதிய ஆம்பூரை வேலூரில் உருவாக்கி விடக்கூடாது என்பதற்காக முன் கூட்டியே நடவடிக்கை எடுத்திருக்கலாம். இருந்தாலும், இது குறித்து தீர விசாரித்து பிறகு தேவையானால் விவரம் அறிவிக்கிறேன்.